**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR QUARRYING PROPOSAL OVER AN EXTENT OF 3.59.00 HA - M/S.R.HARIHARASUDHAN ROUGH STONE AND GRAVEL QUARRY, S.F.NO. 3/8, 3/9, 3/10, 3/11, 3/12A, 3/12B, 3/12C, 3/12D, 4/2, 4/3, 4/4A, 4/4B, 4/5 & 4/6 OF SUNDAKKOTTAI VILLAGE, ARUPPUKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 30.06.2026, 11.00 AM AT M/S.SATHYA MAHAL, 1/117A, ARUPPUKOTTAI – SAYALGUDI MAIN ROAD, M.REDDIAPATTI, ARUPPUKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT.**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.M.Marimuthu | : | Revenue Divisional Officer,<br>Aruppukottai,<br>Virudhunagar District. |
| 2 | Er. J. Hamoneth Joesun | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| 3 | Thiru.N.Senthilkumar | : | Tahsildar<br>Aruppukottai |
| 4 | Er.R.Chithradevi | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| | As per Attendance Register | : | Government Officials, Public and Project proponent 224 Nos (List enclosed). |

The public hearing was held on 30.06.2026 at 11.00AM at M/s.Sathya Mahal,1/117A, Aruppukottai – Sayalgudi Main Road, M.Reddiapatti, Aruppukottai Taluk, Virudhunagar District under EIA Notifications, 2006 for the Quarry proposal over an extent of 3.59.00 Ha - M/s.R.Hariharasudhan Rough Stone and Gravel Quarry, S.F.No.3/8, 3/9, 3/10, 3/11, 3/12A, 3/12B, 3/12C, 3/12D, 4/2, 4/3, 4/4A, 4/4B, 4/5 & 4/6 of Sundakkottai Village, Aruppukottai Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the Revenue Divisional Officer, Aruppukottai, other Government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public notices informing the conduct of Public Hearing was published in "Dinamalar" and "The New Indian Express" on 27.05.2026. He also informed that wide publicity was given about the conduct of public hearing by circulating pamphlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their

views after completion of the presentation. He added that the written statements would also be received.

Further he stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu to Consider the issue of Environmental Clearance to the proposed project.

The Revenue Divisional Officer, Aruppukottai initiated the Public Hearing process. Subsequently, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s.R.Hariharasudhan Rough Stone and Gravel Quarry to the public along with Environmental Management Plan.

Further, the public has furnished their views with respect to the project as follows –

**1. Thiru. Vasudevan, Bommakottai Village:**

Thiru.Vasudevan stated that though the proposed quarry offers employment to only 34 persons, but nearly 30,000 people are going to get affected by its operations. He further stated that Sundakkottai Village falls under the jurisdiction of Bommakottai Village Panchayat, and if this is not properly recorded, the Panchayat would lose the revenue generated from the quarry. He informed that already six quarries are operating within a radius of 500 metres in the Bommakottai Panchayat area and sought details of the amount contributed by those six quarries towards the Public Welfare Development Fund for the benefit of Bommakottai Village. He further stated that there is another quarry located near Bommakottai Village, from which water is discharged into the Sundakkottai irrigation tank, rendering the water unfit for drinking. He also stated that a majority of the residents of Bommakottai Village are suffering from kidney-related ailments. He alleged that the officials of the Department of Geology and Mining have not conducted proper inspections and requested that a white paper containing the

details of all field inspections carried out during the past five years be published. Further, he stated that agricultural lands are being purchased for establishing quarrying operations and requested that the Government to pass G.O for prohibiting the purchase of agricultural lands for quarrying purposes. He added that farmers are compelled to sell their agricultural lands to quarry owners at low prices, thereby affecting their livelihood. He further stated that when quarry owners establish quarries adjacent to existing agricultural lands, the neighbouring cultivable lands are adversely affected. Further, he said that he owns a farm land in Survey No. 47, whereas quarries are under operation in the adjacent Survey Nos. 46 and 48. According to him, due to blasting operations in the quarry, the groundwater in his well is being diverted elsewhere, thereby affecting irrigation and agricultural activities. He questioned whether the Government is protecting farmers or industrialists. He requested the authorities to furnish a report to the public indicating whether protective fencing has been provided in other quarries, similar to the fencing provided in the present quarry. If such fencing has not been provided, he requested details of the action taken against the defaulting quarries.

He further stated that more than ten quarries are operating in the Sundakkottai and Bommakottai areas and questioned the cumulative impact caused when blasting is carried out at different times in each quarry. He enquired whether any study or report is available for quantifying the dust emissions generated from the blasting operations in six surrounding quarries. He also stated that the lorries transporting stones from the quarries are not covered with tarpaulin sheets and that the movement of such lorries along the road near Kalloorani School results in dust entering the school premises. He further stated that water sprinkling has been done on the roads only during certain specified hours by the quarry operators and the sprinkled water dries up within half an hour, after which dust is again dispersed. He said that the discharge of wastewater and dumping of waste soil from the quarries operating in the Sundakkottai area have caused the Sundakkottai irrigation tank to dry up and requested that

the matter to be brought to the attention of the Revenue Divisional Officer. Further he stated that as blasting is carried out at different times in various quarries, houses located up to five kilometres away continue to experience vibrations for nearly twenty minutes, resulting in falling of roof tiles from buildings. He also stated that blast holes should be drilled only up to a depth of one metre; however, in these quarries, holes are reportedly being drilled to depths ranging from 2 to 2½ metres, resulting in excessive vibrations. He therefore requested the Government to issue an order restricting the drilling depth to one metre.

Further he requested quarries should be permitted to operate only beyond a distance of 500 metres from irrigation wells so that farmers depending on well irrigation are not affected. He has stated that Sundakkottai Village comes under the Bommakottai Village Panchayat and there is an irrigation tank located about 1,400 metres from Bommakottai Village, which serves as the primary source of water for the village. Therefore he has requested to collect water samples for analysis to assess the quality of water in the said tank. He further suggested Government to undertake quarry operations directly like TASMAC and also the Government can pass appropriate G.O in this regard. He has also suggested to establish crusher units within the quarry premises itself. Because, if the quarry and crusher unit are located at different places, the transportation of minerals by lorries would result in increased dust pollution. Though several quarry companies are operating in the Bommakottai area, he has requested those quarry owners to undertake developmental works for Bommakottai Village under the Public Welfare Development Fund, including the establishment of R.O Plant and the provision of toilet facilities for school children. He has requested the authorities to consider these proposals while deciding on the grant of approval for the project. Thereafter, the Revenue Divisional Officer has assured that all the views and suggestions expressed during the public hearing would be brought to the notice of the Government.

**2. Thiru.V. Mohan, Muthuramalingapuram Village**

Thiru. A. Mohan, he is serving for Armed Forces. He informed that more than ten quarries are already operating in the village and that the blasting carried out in these quarries disturbs the sleep of children. Therefore, he requested that permission should not be granted for the proposed quarry.

**3. Thiru. Pothiraj, Krishnapuram Village**

Thiru. Pothiraj stated that the speakers who had addressed the gathering earlier had expressed they were affected by the operation of quarries and had therefore opposed the establishment of further quarries. He pointed out the suggestion said by the previous speaker that the Government should take over and operate all quarries. In this regard, he questioned whether dust pollution would cease merely because the quarries were operated by the Government. He further requested the Government officials to conduct site inspections before granting permission for quarrying operations and that approval is issued only if the proposed quarry site satisfies all the prescribed statutory requirements. He also shared a fact, i.e., at present, extraction of river sand and removal of earth from patta lands have been prohibited. In such circumstances, he questioned how houses could be constructed without Jelly stones and M-sand produced from quarries and how people could secure housing. He remarked that every individual requires clothing, food, and shelter.

Further, he has stated, in earlier days, most houses were thatched or tiled, whereas at present almost all houses are constructed using reinforced concrete. He questioned how the required building materials, such as stone aggregates and manufactured sand, could be obtained without quarries. He has stated more than 1,000 construction workers in Aruppukottai Taluk are directly dependent on quarry operations for their livelihood and that closure of quarries would adversely affect both direct and indirect employment opportunities. He further stated that

quality stone resources are available in Virudhunagar District, whereas such resources are not available in Ramanathapuram District. Consequently, building stones are transported from Virudhunagar District to Ramanathapuram District. He has also stated, quarry owners generally purchase agricultural lands only after informing the landowners that the lands are intended to be used for quarrying purposes. Farmers sell their lands with full knowledge of the intended use. Though the market value of such agricultural lands is only about ₹4 to ₹5 lakhs, farmers sell them to quarry owners for around ₹30 lakhs. He has concluded as in the absence of quarries, the entire construction sector would be severely affected, leading to increased unemployment. Therefore, he has requested for approval to be granted for the establishment of the proposed quarry.

**4. Thiru. Dhanapandian, Muthuramalingapuram Village**

Thiru. Dhanapandian stated that he owns agricultural land in Sundakkottai Village and agricultural crops are getting affected by the dust generated from quarrying operations. He further stated, blasting activities in quarries adversely affect the brain development of young children. He expressed that the project which adversely affects society should not be permitted. He also requested, permission should not be granted for a large number of quarries within the same locality. He stated that quarrying activities adversely affect the groundwater table and further alleged that employment opportunities are being provided to the persons from outside the locality instead of local residents. Finally, he has requested for careful examination on the proposed quarry to grant permission.

**5. Thiru. S. Ramar, Aladipatti Village**

Thiru. S. Ramar stated that although, as per Government records, the proposed quarry falls under Bommakottai Panchayat, the entire quarry area is actually situated in Aladipatti Village. He further stated that just as the fireworks industry which is the principal occupation of people

of Sivakasi, stone quarrying and stone breaking constitute the primary occupation of Aladipatti Village. He stated that the proposed quarry would not cause any adverse impact on the surrounding villages, including Bommakottai, Karisalkulam and Muthuramalingapuram. Further, he has stated, quarrying activities would not affect the groundwater table. He has said, more than 80% of the funds generated through quarry operations are being spent towards the benefit of the respective villages. He requested the authorities to grant permission in such a manner that neither the general public nor the quarry owners would be adversely affected. He further stated that establishment of the proposed quarry would generate employment opportunities for people residing in the surrounding villages. Therefore, he has requested for necessary action be taken to grant approval for the proposed project at the earliest.

**6. Thiru. Saravana Ganesan, Silukkuppatti Village**

Thiru. Saravana Ganesan stated that for every tonne of stone quarried, the quarry operator remits a seigniorage fee of ₹125 to the Government. He further stated, as per the project report, the Government would earn approximately ₹25 crores as revenue during the five-year lease period. He has also stated that nearly 80% of the said revenue would accrue to the respective Village Panchayats and could be utilized for implementing village development and welfare schemes. He further stated, if such funds are not received from the Government, appropriate representations should be made to secure the same. He also informed that under the Corporate Social Responsibility (CSR)/Socio-Economic Development commitment of the project, a sum of ₹5 lakhs would be allocated for development activities in the village school. He further stated that blasting operations in the quarry would be carried out only during the timings prescribed under the Government guidelines. He has requested that officials for grand of permission to the quarry owners to commence quarrying operations in accordance with the applicable Government guidelines and expressed his support for the proposed project.

**7. Thiru. Vijayaraj, Kanjanayakkanpatti Village**

Thiru. Vijayaraj stated that he belongs to an agricultural family and owns 10 acres of agricultural land. He informed that he had mortgaged his land to purchase a tractor and a compressor (drilling equipment), which are presently being hired out to the proposed quarry, thereby supporting his livelihood. He has stated, if permission for the proposed quarry is denied, his livelihood would be adversely affected. Therefore, he has requested for grant of permission for the establishment of the proposed quarry.

**8. Thiru. S. Ramar, Aladipatti Village**

Thiru. S. Ramar, he had already recorded his views earlier and wished to reiterate one additional point. He has requested the Government to issue appropriate guidelines directing quarry operators to adopt the *Nonel blasting* method, which has now been introduced, while carrying out blasting operations in the proposed quarry.

**9. Thiru. Ganesh, Kathalampatti Village**

Thiru. Ganesh stated that the proposed quarry would not cause any adverse impact on Kathalampatti Village. He further stated that the proposed quarry would improve the livelihood of the local people and expressed his support for the establishment of the quarry.

**10. Thiru. Narendran, Bommakottai Village**

Thiru. Narendran has stated that he has certain doubts regarding the proposed quarry and requested that the same to be clarified. He has stated that he was not aware of the extent to which the impacts caused by the quarries already operating in the village, which has to be assessed. He further stated that the existing quarries have already caused adverse impacts in the locality in his personal experience, he said, the operation of quarries is detrimental to public welfare, as blasting causes vibrations in his house. He further stated that if the doors and windows of his

house are damaged due to blasting operations, the quarry owners would not compensate him for such losses. He has also said, the proposed quarry may claim that they are providing employment to 30 persons is merely an individual opinion. According to him, blasting operations cause vibrations to the doors and windows of his house and have resulted in cracks in several houses in the village.

He further stated that a few days earlier, dead fish were found floating in the Sundakkottai irrigation tank and expressed the view that the fish might have died due to deterioration in the quality of the tank water. He has questioned whether anyone would be willing to use the water from the Sundakkottai irrigation tank under such circumstances. He also stated that many elderly persons in the village suffer from heart-related ailments and that the vibrations caused by blasting operations adversely affect their health.

**11. Thiru. Alex David Raj, Kalaiyarkarisalkulam Village**

Thiru. Alex David Raj stated that several educational institutions and hospitals are located in and around his village and pregnant women are also admitted to those hospitals. He stated that the blasting operations carried out in the quarries have been causing increasing ground vibrations day by day. He further expressed the apprehension that granting permission for more quarries would adversely affect the surrounding villages and could eventually lead to earthquake-like conditions. Therefore, he expressed his opposition to the establishment of the proposed quarry.

**12. Thiru. Jeyasakthi, Kathalampatti Village**

Thiru. Jeyasakthi stated that no quarry is presently in operation in Kalaiyarkarisalkulam Village. Hence, according to him, the residents of Bommakottai and Kalaiyarkarisalkulam would not be affected by the proposed quarry. He further stated that the project would generate substantial employment opportunities and therefore requested that approval be granted for the proposed quarry project.

**13. Thiru. Dhanapandian (who had already recorded his views earlier)**

Thiru. Dhanapandian stated that several speakers had expressed that the proposed quarry would improve their livelihood. However, he pointed out that no one had spoken about the adverse impacts on the houses and the residents of their locality. He therefore requested the Government to take an appropriate and judicious decision on the proposed project.

**14. Tmt. Sumathi, Kalaiyarkarisalkulam Village**

Tmt. Sumathi stated that the quarry is located approximately 3 kilometres from her residence and that blasting operations carried out in the quarry cause vibrations in the surrounding houses.

**15. Thiru. Vigneshwaran, Kalaiyarkarisalkulam Village**

Thiru. Vigneshwaran stated that his house is located approximately 200 metres from the stone quarry and that blasting operations in the quarry cause severe vibrations. He referred to the statement made by an earlier speaker that food, clothing and shelter are the basic necessities of life. However, he stated that, for the residents of his village, even secure shelter has become uncertain due to the impacts of quarrying activities. He further stated that his village is the sole source of livelihood for its residents and requested that these concerns be duly considered while examining the proposal for the quarry.

After that, since no one came forward to give view on the project, the Revenue Divisional Officer, Aruppukottai invited the public to offer their furthermore views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted and informed that the Minutes of the Meeting along with Compact Disc consisting the

entire videographed Public Hearing will be forwarded to the SEIAA for further actions. He also thanked all and requested to furnish their views if any in written of petitions.

- Total number of written petitions received - 47

With this, the meeting came to the end.

| | |
|---|---|
| District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Virudhunagar. | Revenue Divisional Officer,<br>Aruppukottai,<br>Virudhunagar District. |

**Enclosures:**

1. Copy of Attendance Register (Total 18 – pages, 224 persons).
2. Videograph of public hearing meeting (Pendrive).
3. Copy of Public Notices (Both Tamil & English).

**<u>விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், சுண்டக்கோட்டை கிராமம், புல எண்கள். 3/8, 3/9, 3/10, 3/11, 3/12A, 3/12B, 3/12C, 3/12D, 4/2, 4/3, 4/4A, 4/4B, 4/5 மற்றும் 4/6-ல் விஸ்தீரணம் 3.59.00 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள திரு.R.ஹரிஹரசுதன் அவர்களின் உத்தேசிக்கப்பட்டுள்ள உடைகல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து 30.06.2026 அன்று காலை 11.00 மணியளவில், விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், எம். ரெட்டியபட்டி கிராமம், அருப்புக்கோட்டை - சாயல்குடி மெயின் ரோடு, தி/ள்.சத்யா மஹாலில் வைத்து நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.</u>**

<u>பங்கேற்றோர்:</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.மு.மாரிமுத்து | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>அருப்புக்கோட்டை,<br>விருதுநகர் மாவட்டம். |
| 2 | பொறி.ஜே.ஹேமந்த் ஜோசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 3 | திரு.நா.செந்தில்குமார் | : | வட்டாட்சியர்,<br>அருப்புக்கோட்டை |
| 4 | திருமதி.இரா.சித்ராதேவி | : | உதவிப் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| | வருகை பதிவேட்டின் படி | : | அரசு அலுவலர்கள், பொதுமக்கள், மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 224 நபர்கள். (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது). |

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், சுண்டக்கோட்டை கிராமம், புல எண்கள். 3/8, 3/9, 3/10, 3/11, 3/12A, 3/12B, 3/12C, 3/12D, 4/2, 4/3, 4/4A, 4/4B, 4/5 மற்றும் 4/6-ல் விஸ்தீரணம் 3.59.00 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.R.ஹரிஹரசுதன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, அப்பகுதி பொதுமக்களின் கருத்தினை அறிய, பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், எம்.ரெட்டியாபட்டி, அருப்புக்கோட்டை - சாயல்குடி மெயின் ரோடு, அமைந்துள்ள தி/ள்.சத்யா மஹாலில் வைத்து, 30.06.2026 முற்பகல் 11.00 மணியளவில் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் துவங்கியது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமையேற்க வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை அவர்களையும், ஏனைய அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்தக் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். மேலும் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்த செய்தி வெளியீடு ஏற்கனவே "தினமலர்" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆகிய நாளிதழ்களில் 27.05.2026 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததாகவும் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து 25.06.2026 அன்று குவாரி அமையவுள்ள சுற்று கிராமங்களில், கருத்து கேட்புக் கூட்டம், நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு, ஆட்டோவில் ஒலி பெருக்கி அமைத்து அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதுடன், கருத்துக் கேட்புக் கூட்டம் தொடர்பான துண்டு பிரசுரங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அதன் தொடர்ச்சியாக பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் காலை 11.00 மணிக்கு தொடங்கி நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்கள் ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை விபரமாக தெரிவித்து, கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ தெரிவிக்கலாம் எனவும், தெரிவிக்கப்படும் கருத்துக்கள் அனைத்தும் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாவட்ட நிர்வாகத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தலைமை அலுவலகம் வாயிலாக, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்டு ஆணையத்திற்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் தொடர்பான விளக்கங்களை, மேற்படி தொழிற் நிறுவனம் சார்பில் பொதுமக்களிடம் விளக்குமாறு கேட்டுக்கொண்டதை தொடர்ந்து திரு.R.ஹரிஹரசுதன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி அவர்களின் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், அமையவுள்ள திட்டம் தொடர்பாக புள்ளி விளக்க காட்சி (Power Point Presentation) மூலம் விவரமாக பொதுமக்களுக்கு விளக்கினார்.

அதனைத் தொடர்ந்து கூட்டத்திற்கு தலைமை வகித்த வருவாய் கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை அவர்கள் பேசிய பொழுது, உத்தேசிக்கப்பட்டுள்ள உடைகல் குவாரி தொடர்பான அனைத்து விபரங்களும் இக்கூட்டத்தில் புள்ளி விளக்க காட்சி மூலம் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை கூறலாம் எனவும், பதிவு செய்யப்பட்ட கருத்துக்கள் அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவித்ததை தொடர்ந்து, மேற்படி கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய் மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

**1.திரு.வாசுதேவன், பொம்மக்கோட்டை கிராமம்,**

திரு.வாசுதேவன் அவர்கள், இக்குவாரியில் 34 நபர்களுக்கு வேலை தருவதாகவும், ஆனால், 30,000 நபர்கள் இக்குவாரியினால் பாதிக்கப்படுகின்றனர் எனவும், சுண்டக்கோட்டை கிராமம் பொம்மக்கோட்டை ஊராட்சிக்குட்பட்டதாகவும், அதை குறிப்பிடாவிடில் அந்த ஊராட்சிக்கு குவாரியினால் வரும் வருவாய் பாதிக்கப்படும் எனவும், பொம்மக்கோட்டை ஊராட்சி பகுதியில் 500 மீ சுற்றளவில் 6 குவாரிகள் செயல்பட்டு கொண்டிருப்பதாகவும், அந்த 6 குவாரிகளிலிருந்து பொதுமக்கள் மேம்பாட்டு நிதியிலிருந்து பொம்மக்கோட்டை கிராமத்திற்கு எவ்வளவு வழங்கப்பட்டிருக்கிறது எனவும், மேலும், பொம்மக்கோட்டை கிராமத்தின் அருகில் ஒரு குவாரி இருப்பதாகவும், அக்குவாரியின் தண்ணீரை சுண்டக்கோட்டை கண்மாய்க்குள் விடுவதாகவும், அந்த தண்ணீர் குடிக்க முடியவில்லை எனக் கூறினார். மேலும், பொம்மக்கோட்டை கிராம மக்கள் பெரும்பாலும் கிட்னி பாதிப்புடன் இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை அதிகாரிகள் ஆய்வு நடத்தவில்லை

எனவும், மேலும் கடந்த 5 வருடங்களில் கள ஆய்வு செய்யப்பட்ட விபரங்களை வெள்ளை அறிக்கையாக வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும், குவாரி தொழில் செய்வதற்கு விவசாய நிலத்தை வாங்குகிறார்கள். அவ்வாறு விவசாய நிலங்களை தொழில் தொடங்குவதற்கு வாங்க கூடாதென அரசாணை பிறப்பிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில், விவசாய நிலத்தை குறைவான விலைக்கு குவாரி உரிமையாளர்களிடம் விற்றுவிடுவதால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர் எனவும், அவ்வாறு வாங்கும் குவாரி உரிமையாளர்கள் விவசாய இடத்திற்கு அருகே குவாரி அமைக்கும் பொழுது ஏற்கனவே விவசாயம் செய்து வரும் நிலங்கள் பாதிக்கப்படுகிறது எனவும் தெரிவித்தார். மேலும், தனக்கு சர்வே எண்.47-ல் ஒரு தோட்டம் இருப்பதாகவும், அதன் அருகிலேயே சர்வே எண்.46 மற்றும் 48-ல் ஒரு குவாரி இருப்பதாகவும், அக்குவாரியில் வெடி வைப்பதால் தனது கிணற்றிலுள்ள தண்ணீர் வேறு எங்கோ சென்று விடுகிறது எனவும், அதனால் விவசாயம் பாதிக்கப்படுகிறது என்றும் கூறினார். அரசானது விவசாயிகளை பாதுகாக்கிறதா? அல்லது தொழில் அதிபர்களை பாதுகாக்கிறதா என தெரியவில்லை என்று தெரிவித்தார். உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியில் தடுப்பு வேலிகள் அமைத்துள்ளதைப் போல, மற்ற குவாரிகளில் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளதா என பொதுமக்களுக்கு அறிக்கை தரவேண்டும் எனவும், இல்லையெனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தகவல் தர வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும், சுண்டக்கோட்டை மற்றும் பொம்மக்கோட்டையில் 10க்கும் மேற்பட்ட குவாரிகள் செயல்படுவதாகவும், ஒவ்வொரு குவாரியிலும் ஒவ்வொரு நேரம் வெடி வெடிக்கும் பொழுது எவ்வளவு பாதிக்கப்படும் எனவும் வினவினார். சுற்றியுள்ள 6 குவாரிகளில் வெடி வெடிக்கும் பொழுது எவ்வளவு தூசிகள் வெளியேற்றப்படும் என்பது குறித்து அளவீடு செய்யப்பட்டு அறிக்கை உள்ளதா என கேள்வி எழுப்பினார். மேலும், குவாரிகளிலிருந்து கற்களை ஏற்றிச் செல்லும் லாரிகளில் தார்பாலின் கொண்டு மூடி எடுத்துச்செல்லப்படுவதில்லை எனவும், மேலும் கல்லூரணி பள்ளி அருகே உள்ள சாலைகளில் லாரிகள் செல்வதால் தூசு அனைத்தும் பள்ளிக்குள் செல்வதாக கூறினார். மேலும், குவாரி நிறுவனங்களின் மூலம் சாலைகளில் குறிப்பிட்ட சில நேரங்களில் மட்டுமே தண்ணீர் தெளிக்கப்படுகிறது எனவும், அவ்வாறு தெளிக்கப்படும் தண்ணீர் அரை மணி நேரத்தில் காய்ந்து மீண்டும் தூசுகள் பரவுகின்றன எனவும் தெரிவித்தார். சுண்டக்கோட்டை

பகுதிகளில் செயல்பட்டு கொண்டிருக்கும் குவாரிகளின் கழிவுநீர் மற்றும் கழிவு மண் கொட்டப்படுவதால் சுண்டக்கோட்டை கண்மாய் வறண்டு போய்விட்டதாகவும் தெரிவித்து, கோட்டாட்சியரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படுவதாகி கூறினார். மேலும், குவாரிகளில் வெவ்வேறு நேரங்களில் வெடி வைப்பதினால் 5 கிலோமீட்டர் தொலைவிற்கு தொடர்ந்து 20 நிமிடங்கள் வீடுகள் அதிர்வடைந்து கூரைகள் கீழே விழுவதாகவும் தெரிவித்தார். மேலும், குவாரிகளில் வெடிபோடுவதற்கு துளைகள் 1 மீட்டர் தான் போடப்படவேண்டும் எனவும், ஆனால் இக்குவாரிகளில் 2 முதல் 2 ½ மீட்டர் வரை துளையிடுகின்றனர் எனவும், இதனால் அதிகளவு அதிர்வு ஏற்படுவதாகவும் கூறினார். எனவே 1 மீட்டர் வரை மட்டுமே துளை போட வேண்டும் என அரசாணை வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். மேலும், கிணற்று பாசன விவசாயம் செய்பவர்களுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படா வண்ணம் கிணற்றிலிருந்து 500 மீட்டர் தொலைவிற்கு அப்பால் குவாரி செயல்பட வேண்டும் எனவும் கூறினார். மேலும், சுண்டக்கோட்டை கிராமம், பொம்மக்கோட்டை ஊராட்சிக்குட்பட்டது எனவும், பொம்மக்கோட்டை கிராமத்திலிருந்து 1400 மீட்டர் தொலைவில் ஒரு கண்மாய் இருப்பதாகவும், அக்கண்மாய்தான் பொம்மக்கோட்டை கிராமத்திற்கு நீர் ஆதாரமாக இருப்பதாகவும் கூறினார். எனவே மேற்படி கண்மாய் நீர் எவ்வாறு இருக்கிறது என நீர் மாதிரிகள் எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். மேலும், TASMAC அனைத்தும் அரசு எடுத்து நடத்துவது போன்று குவாரிகளையும் அரசே நடத்த வேண்டும் என்றும், அதற்கான அரசாணை செய்ய வழிவகை செய்ய வேண்டும் எனவும் கூறினார். மேலும், குவாரி அமைந்திருக்கும் இடத்திலேயே கிரஷரும் அமைக்கப்பட வேண்டும் எனவும், குவாரி ஒரு இடத்திலும் கிரஷர் நிறுவனம் ஒரு இடத்திலும் அமையும் பட்சத்தில் லாரிகளில் கனிமத்தை ஏற்றிச் செல்லும் பொழுது, தூசிகள் அதிகமாக பரவும் எனவும் தெரிவித்து, ஒரே இடத்தில் குவாரி மற்றும் கிரஷர் நிறுவனம் அமைவதற்கு பரிசீலனை செய்யப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். பொம்மக்கோட்டை பகுதியில் பல குவாரி நிறுவனங்கள் செயல்பட்டு வந்தாலும், பொதுமக்கள் மேம்பாட்டு நிதியிலிருந்து பொம்மக்கோட்டை கிராமத்திற்கு, RO பிளாண்ட் செய்து தர வேண்டும் எனவும், பள்ளி குழந்தைகளுக்கு கழிப்பறை வசதிகள் செய்து தர வேண்டும் எனவும் தெரிவித்து, இத்திட்டத்திற்கு அனுமதி வழங்குவது குறித்து பரிசீலனை செய்து முடிவு எடுக்குமாறு கேட்டுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து பேசிய வருவாய் கோட்டாட்சியர்

அவர்கள், பேசிய கருத்துக்கள் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என தெரிவித்தார்.

**2.திரு.V. மோகன், முத்துராமலிங்கபுரம் கிராமம்**

திரு.மோகன் அவர்கள், தான் இராணுவத்தில் வேலை செய்வதாகவும், ஏற்கனவே இக்கிராமத்தில் 10க்கும் மேற்பட்ட குவாரிகள் செயல்படுவதாகவும், இக்குவாரியில் வெடி வைப்பதினால் குழந்தைகள் தூங்க முடியவில்லை எனவும், ஆகையால் இக்குவாரிக்கு அனுமதி வழங்கக் கூடாது என கேட்டுக்கொண்டார்.

**3.திரு.போத்திராஜ், கிருஷ்ணாபுரம் கிராமம்**

திரு.போத்திராஜ் அவர்கள், இதற்கு முன் பேசிய நபர்கள் இக்குவாரி செயல்படுவதால் தங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் எனவே குவாரிகள் வேண்டாம் எனவும் தெரிவித்திருந்தனர். அவர்களில் ஒருவர் பேசும் பொழுது, குவாரிகளை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார். அரசாங்கம் குவாரிகளை ஏற்று நடத்தினால் தூசு பரவாதா என வினாவினார்? மேலும், அவர் கூறுகையில், அரசு அதிகாரிகள் குவாரிகள் அமையவுள்ள அமைவிடத்தினை பார்வையிட்டு, அமைக்கப்படவுள்ள இடங்கள் குவாரி துவங்குவதற்கு விதிமுறைகளுக்குட்பட்டு இருந்தால் மட்டுமே அனுமதி வழங்குகிறார்கள் எனவும் தெரிவித்தார், மேலும், தற்பொழுது ஆற்றில் மணல் அள்ளக்கூடாது பட்டா இடங்களில் மண் அள்ளக் கூடாது என தடை விதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கும் பொழுது, இக்குவாரிகளிலிருந்து எடுக்கப்படும் ஜல்லி மற்றும் எம்-சாண்ட் இல்லையெனில் எவ்வாறு வீடு கட்டுவது எனவும், எவ்வாறு குடியிருப்பது என கேள்வி எழுப்பினார். ஒரு மனிதருக்கு உடுத்த உடை, உண்ண உணவு மற்றும் இருக்க இருப்பிடம் வேண்டும் எனவும் கூறினார். மேலும் அவர் பேசும் பொழுது, முன் காலத்தில் கூரை வீடுகள் மற்றும் ஓட்டு வீடுகள் இருந்தது எனவும், தற்பொழுது கட்டப்படும் அனைத்து வீடுகளுமே கான்கிரிட் போட்ட வீடுகளாகத்தான் கட்டப்படுகிறது எனவும், அவ்வாறு இருக்கும் பொழுது குவாரி இல்லாமல் கற்கள் மற்றும் மணல்கள் வரும் என கேள்வி எழுப்பினார். மேலும், இக்குவாரிகளால் அருப்புக்கோட்டை வட்டத்தில் மட்டுமே சுமார் 1000 க்கு மேற்பட்ட கட்டிட தொழிலாளர்கள் பயனடைந்து வருகிறார்கள் எனவும், குவாரிகள் மூடப்பட்டால் நேரிடையாகவும், மறைமுகமாகவும்

வேலைவாய்ப்புகள் பாதிக்கப்படும் எனவும் தெரிவித்தார். மேலும், விருதுநகர் மாவட்டத்தில்தான் கற்கள் கிடைப்பதாகவும், இராமநாதபுரம் மாவட்டத்தில் நிலத்தில் கற்கள் கிடைக்காத காரணத்தினால், விருதுநகர் மாவட்டத்திலிருந்து தான் கற்கள் கொண்டு செல்லப்படுகிறது எனவும் கூறினார். மேலும், விவசாயிகளிடம் கல்குவாரி உரிமையாளர்கள், தங்களிடம் வாங்கும் இடத்தில் கல்குவாரி அமைப்பதற்காகத் தான் நிலத்தை வாங்குவதாக தெரிவித்து தான் விலைக்கு வாங்குகிறார்கள். தமது இடம் கல்குவாரி அமைப்பதற்காகத்தான் வாங்குகிறார்கள் என்று விவசாயிகளுக்கு தெரிந்து தான் விற்கிறார்கள். சுமார் 4 இலட்சம் முதல் 5 இலட்சம் வரையில் தான் சந்த மதிப்புள்ள நிலத்தினை விவசாயிகள், குவாரி உரிமையாளர்களுக்கு ரூபாய் 30 இலட்சம் பெற்றுக்கொண்டு நிலத்தினை விற்றுவிடுதாகவும் தெரிவித்தார். எனவே குவாரிகள் இல்லையென்றால் அனைத்து கட்டிடப்பணிகளுமே பாதிக்கப்பட்டு விடும் என தெரிவித்து, அதனால் வேலையில்லா திண்டாட்டம் பெருகி விடும் எனவும் தெரிவித்து, குவாரி அமைப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

**4.திரு.தனபாண்டியன், முத்துராமலிங்கபுரம் கிராமம்,**

திரு.தனபாண்டியன் அவர்கள், சுண்டக்கோட்டை கிராமத்தில் தமக்கு விவசாய நிலம் இருப்பதாகவும், குவாரிகளால் ஏற்படும் தூசிகளால் விவசாய பயிர்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் குவாரிகளில் வெடி வெடிப்பதனால் சிறு குழந்தைகளின் மூளை வளர்ச்சி பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். மேலும், சமுதாய அமைப்புகளை பாதிக்கும் எந்த திட்டமும் வேண்டாம் என கூறினார். மேலும், ஒரே பகுதியில் அதிகமான குவாரிகளுக்கு அனுமதி வழங்க வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார். குவாரிகளால் நிலத்தடி நீர் மட்டம் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படாமல் வெளியூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது எனவும் கூறினார். எனவே மேற்படி திட்டத்திற்கு பரிசீலனை செய்து அனுமதி வழங்கு வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

**5.திரு.S.ராமர், ஆலடிபட்டி கிராமம்**

திரு.S.ராமர் அவர்கள் பேசும் பொழுது, அரசு ஆவணங்களின்படி குவாரி அமைந்துள்ள இடம் பொம்மக்கோட்டை பஞ்சாயத்தில் இருந்தாலும் அதனுடைய முழு பகுதியும் குவாரி அமைந்துள்ள இடம் ஆலடிப்பட்டி கிராமம் ஆகும் எனவும், சிவகாசிக்கு பட்டாசு தொழில்போல் ஆலடிப்பட்டி கிராமத்தின் பிராதான தொழிலே கல் உடைக்கும் தொழில் எனவும், மேற்படி குவாரிகளால் அதனைச் சுற்றி அமைந்துள்ள பொம்மக்கோட்டை, கரிசல்குளம், முத்துராமலிங்கபுரம் உள்ளிட்ட கிராமங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்பட வாய்ப்பு இல்லை எனவும் தெரிவித்தார். மேலும், குவாரிகளில் நிலத்தடி நீருக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாது எனவும், குவாரிகளினால் வழங்கப்படும் 80%-க்கும் அதிகமான நிதி அந்தந்த கிராமங்களுக்கு செலவிடப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். மேலும், குவாரிகளால் கிராம பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் எற்படாமலும் குவாரி உரிமையாளர்களுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணமும் அதிகாரிகள் அனுமதி வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். மேற்படி திட்டம் இப்பகுதியில் அமைவதால் சுற்றியுள்ள கிராம பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் எனவும், எனவே மேற்படி திட்டத்திற்கு உரிய அனுமதி விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெ எனவும் கேட்டுக்கொண்டார்.

**6.திரு.சரவண கணேசன், சிலுக்குப்பட்டி கிராமம்**

திரு.சரவண கணேசன் அவர்கள், குவாரிகளில் 1 டன் கற்கள் வெட்டி எடுக்கப்பட்டால் சீனியரேஜ் தொகையாக ரூபாய்.125 குவாரி நிறுவனம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார். இத்திட்ட அறிக்கையின்படி குத்தகை காலமான 5 வருடங்களில் அரசுக்கு சுமார் 25 கோடி வருமானம் ஈட்டப்படும் என தெரிவித்தார். மேற்படி தொகையில் சுமார் 80% நிதி அந்தந்த பஞ்சாயத்திற்கு வந்து சேரும் எனவும் கூறினார். அவற்றை அந்தந்த கிராம நலத்திட்டங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும், மேற்படி நிதி அரசிடமிருந்து வரவில்லை என்றால் உரிய முறையீடு செய்து பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். மேலும், செயல்படுத்தப்படும் குவாரி திட்டத்தின் கீழ் நிறுவனத்தின் சமூக பொருளாதார பங்களிப்பின் கீழ் ரூபாய் 5 இலட்சம் அக்கிராமத்தில் அமைந்துள்ள பள்ளியின் வளர்ச்சி திட்டங்களுக்கு செயல்படுத்தப்படுவதாகவும் கூறினார்.

மேலும், குவாரியில் வெடி வெடிப்பது அரசு வழிகாட்டுதலின்படி குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே வெடி வெடிக்கப்படும் எனவும் தெரிவித்தார். மேலும், அரசு வழிகாட்டுதல்களின்படி குவாரி உரிமையாளர்கள் தொழில் தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டு இத்திட்டத்தை வரவேற்பதாக தெரிவித்தார்.

**7.திரு.விஜயராஜ், கஞ்சநாயக்கன்பட்டி கிராமம்**

திரு.விஜயராஜ் அவர்கள், தான் ஒரு விவசாய குடும்பத்தை சார்ந்தவர் எனவும், தனக்கு 10 ஏக்கர் நிலம் உள்ளதாகவும், அவற்றினை அடமானம் வைத்து டிராக்டர் மற்றும் கம்பரசர் (துளையிடும் கருவி) ஆகியவற்றை வாங்கி மேற்படி குவாரிக்கு வாடகைக்கு விட்டு தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருவதாகவும், மேற்படி திட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவும், எனவே மேற்படி குவாரி அமைவதற்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

**8.திரு.S.ராமர், ஆலடிபட்டி கிராமம்**

தாம் ஏற்கனவே தமது கருத்தை பதிவு செய்து விட்டதாகவும், மேற்படி பதிவில் மீண்டும் தனது கருத்தினை ஒருமுறை தெரிவிப்பதாகவும் கூறினார். அவற்றில் மேற்படி குவாரி வெடி வைக்கும்பொழுது தற்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நாணல் பிளாஸ்டிங் முறையினை பயன்படுத்த அரசு உரிய வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

**9.திரு.கணேஷ், கத்தாளம்பட்டி கிராமம்**

மேற்படி குவாரி அமைவதால் கத்தாளம்பட்டி கிராமத்திற்கு எவ்வித பாதிப்பு இல்லை எனவும், மேற்படி குவாரியால் தங்களின் வாழ்வாதாரம் மேம்படும் எனவும், தெரிவித்து, இக்குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

**10.திரு.நரேந்திரன், பொம்மக்கோட்டை கிராமம்**

மேற்படி குவாரி அமைவதில் தமக்கு சில ஐயப்பாடுகள் உள்ளதாகவும், அவற்றினை தெளிவு படுத்துமாறும் கேட்டுக்கொண்டார். ஏற்கனவே தமது கிராமத்தில் அமைந்திருக்கும் குவாரிகளினால் பாதிப்பு ஏற்படுகிறதா என எந்த அளவிற்கு பரிசீலனை செய்யப்பட்டள்ளது

என்பது தமக்கு தெரியவில்லை எனவும், மேலும் ஏற்கனவே இருக்க கூடிய குவாரிகளால் பாதிப்பு ஏற்படுவதை குறிப்பிட்டு, தமது வீடு அதிர்வடைகின்றது எனவும், மேலும் குவாரிகளில் வெடி போடுவதால் தமது வீட்டின் கதவு மற்றும் ஜன்னல்கள் பாதிக்கப்பட்டால் குவாரி உரிமையாளர்கள் தமக்கு நஷ்ட ஈடு தரப்போவதில்லை எனவும், மேலும், இக்குவாரி அமைவதனால் 30 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பது என்பது தனிப்பட்ட கருத்து எனவும், குவாரிகளில் வெடி போடுவதால் தமது வீட்டிலுள்ள கதவு மற்றும் ஜன்னல்கள் அதிர்வடைவதாகவும், கிராமத்திலுள்ள வீடுகளில் விரிசல் ஏற்படுவதாகவும் கூறினார். மேலும், அவர் கூறுகையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு சுண்டக்கோட்டை கண்மாயில் மீன்கள் இறந்து ஒதுங்கி கிடந்ததாகவும், கண்மாய் தண்ணீர் பாதிக்கப்பட்டுள்ளதால்தான் மீன்கள் இறப்பதற்கு வாய்ப்பு உள்ளது எனவும் தெரிவித்தார். சுண்டக்கோட்டை கண்மாய் நீரை எடுத்து யாராவது பயன்படுத்த முடியுமா எனவும் வினவினார். மேலும், எங்கள் ஊரில் உள்ள பல வயதான நபர்களுக்கு இதய நோய் உள்ளதாகவும், வெடி வைத்து அதிரும் காரணத்தால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

**<u>11.திரு.அலெக்ஸ் டேவிட்ராஜ், காளையார்கரிசல்குளம் கிராமம்</u>**

திரு.அலெக்ஸ் டேவிட்ராஜ் அவர்கள், தமது ஊரினைச் சுற்றி பல கல்வி நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகள் அமைந்துள்ளதாகவும், மருத்துவமனைகளில் கர்ப்பிணி பெண்கள் உள்ளதாகவும், இக்குவாரிகளில் வெடி வைப்பதினால் நில அதிர்வு நாளுக்கு நாள் அதிகமாக இருப்பதாகவும், மேன்மேலும் குவாரிகளுக்கு அனுமதி வழங்குவதால் கிராமங்கள் பாதிக்கப்பட்டு, நிலநடுக்கத்திற்கு வழிவகுக்கும் என்று கூறி, இக்குவாரி அமைவதற்கு தமது எதிர்ப்பை தெரிவித்தார்.

**<u>12. திரு.ஜெயசக்தி, கத்தாளம்பட்டி கிராமம்</u>**

திரு.ஜெயசக்தி அவர்கள், காளையார்கரிசல்குளம் கிராமத்தில் தற்சமயம் எந்த குவாரியும் இயக்கத்தில் இல்லை எனவும், ஆகையால் பொம்மக்கோட்டை மற்றும் காளையார்கரிசல்குளம் பகுதி மக்களுக்கு பாதிப்பு ஏதும் இல்லை எனவும், வேலைவாய்ப்புதான் அதிகமாக கிடைக்கிறது எனவும், எனவே மேற்படி குவாரி திட்டத்திற்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

**13.திரு.தனபாண்டியன் (ஏற்கனவே கருத்தினை பதிவு செய்தவர்)**

திரு.தனபாண்டியன் அவர்கள், ஏற்கனவே பேசிய பல நபர்கள் மேற்படி குவாரி அமைவதால் வாழ்வாதாரம் மேம்படும் என பேசினார்கள், ஆனால் எங்கள் பகுதி வீடுகள் மற்றும் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள் அது குறித்து யாரும் பேசவில்லை. எனவே, அரசாங்கம் நல்ல ஒரு முடிவை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

**14.திருமதி.சுமதி, காளையார்கரிசல்குளம் கிராமம்**

திருமதி.சுமதி அவர்கள், தமது வீட்டிலிருந்து சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் குவாரி அமைந்திருப்பதாகவும், அக்குவாரியிலிருந்து வெடி வைப்பதால் வீடுகளில் அதிர்வு ஏற்படுகிறது எனவும் தெரிவித்தார்.

**15.திரு.விக்னேஷ்வரன், காளையார்கரிசல்குளம் கிராமம்**

திரு.விக்னேஷ்வரன் அவர்கள், தமது வீடு கற்குவாரியிலிருந்து சுமார் 200 மீட்டர் தொலைவில் இருப்பதாகவும், குவாரிகளில் இருந்து வெடி போடுவதால் அதிர்வு ஏற்படுவதாகவும், இதற்கு முன் பேசியவர் உண்ண உணவு, உடுத்த உடை மற்றும் இருக்க இருப்பிடம் அத்தியவாசியமான ஒன்று என கூறினார் என்றும், ஆனால் எமது கிராமத்தில் இருக்க இருப்பிடமானது கனவாகவே உள்ளது எனவும், தமது கிராமம்தான் தமக்கு வாழ்வாதாரமாக இருப்பதாகவும், ஆகவே இவற்றை பரிந்துரை செய்து பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக்கூற வேறுயாரும் முன்வராததால், வருவாய் கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும், கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த வீடியோ அடங்கிய விரலி (Pen drive) மற்றும் எழுத்துபூர்வமான கூட்ட நடவடிக்கைகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு பரிசீலினை செய்யும் பொருட்டு அனுப்பிவைக்கப்படும் எனவும், மற்றும்

எழுத்துப் பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து எழுத்துப்பூர்வமான மனுக்கள் பெறப்பட்டது.

எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை - 47

அத்துடன் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நிறைவுபெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர் மாவட்டம்.

வருவாய் கோட்டாட்சியர்,
அருப்புக்கோட்டை,
விருதுநகர் மாவட்டம்.

இணைப்புகள்:

1. வருகைப் பதிவேடு நகல் (மொத்தம் - 18 பக்கங்கள், 224 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்புக் கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).